**<u>சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி</u>**

**O.S.No. 184/2023**

நாள் 20.02.2025

**<u>வா.சா.1. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–</u>**

எனது இறால்தீவனக்கடையில் பிரதிவாதி இறால் தீவனம் வாங்கியதற்கான இரசீது Cash and Credit bills (எண்ணிக்கை – 6) **பி.வா.சா.ஆ.1 வரிசைகள் ஆகும்.** பிரதிவாதி என்னிடம் இறால் தீவனம் கொள்முதல் செய்தவகையில் எனக்கு கொடுக்க வேண்டிய பாக்கி தொகை **ரூ.4,17,750/–** என்றால் மேற்படி தொகையை பிரதிவாதி 2017 ஆம் ஆண்டிலேயே கொடுத்து கணக்கு வழக்குகளை தீர்த்துவிட்டார். 2019 ஆம் ஆண்டு பிரதிவாதி என்னிடம் இறால் தீவனம் கொள்முதல் செய்த வகையில் ரூ.70,000/– மட்டும் நிலுவையில் உள்ளது. நான் அமிர்தா அக்குவா என்ற பெயரில் நாகப்பட்டினம் மாவட்டம், பாப்பா கோவில் என்ற ஊரில் கடையை 2016 ஆம் ஆண்டு ஆரம்பித்து 2019 நவம்பர் மாதம் வரை நடத்தி பின்னர் மூடிவிட்டேன். எதற்காக நான் மேற்படி கடையை மூடிவிட்டேன் என்றால் 2016 ஆம் ஆண்டு 1 டன் தீவினத்திற்கு ரூ.4,500/– வரை இலாபம் கிடைக்கும், 2019 ஆம் ஆண்டு 1 டன் தீவினத்திற்கு ரூ.750/– வரை இலாபம் கிடைத்ததால் தொடர்ந்து நடந்த

இயலாத சூழ்நிலையில் கடை நடத்துவதை மூடிவிட்டேன். நான் கடையை நடத்தி வந்த காலங்களில் வருமான வரி கணக்குகளை உரிய முறையில் செலுத்தியுள்ளேன். அந்த வருமான வரி கணக்குகள் என்னிடம் தான் உள்ளது. அந்த விபரங்களை நான் வருமான வரி கணக்குகளில் குறிப்பிடவில்லை. வணிக வரி அலுவலகத்தில் கணக்கு வழக்குகளை சமர்பித்தேனா என்றால் இறால் தீவனம் குறித்து கணக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை ஏனென்றால் இறால் தீவனத்திற்கு GST கிடையாது. மொத்த வரவு, மொத்த செலவு விவரங்களை மட்டும் வருமான வரியில் செலுத்தி வைத்துள்ளேன். எனது கடையில் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு வழங்கும் இரசீதுகளுக்கு கார்பன் வைத்து பிரதி வைத்துக்கொள்வோம். அந்த அடிக்கட்டை பிரதிகளும் என் வசமே உள்ளது. பிரதிவாதி கொள்முதல் செய்த விபரங்கள் அனைத்தும் அந்த அடிக்கட்டையில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் இறால் தீவனம் கொள்முதல் செய்ததை தவிர வேறு எந்தவிதமான பணபரிவரத்தனைகள் கடன் பெறுவது சம்மந்தாக எந்த தொடர்பும் என்னிடம் வைத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிம் 27.09.2018 ரூ.6,00,000/– பணம் வாங்கிகொண்டு

திருத்துறைப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்துள்ளது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வணிக ரீதியாக தொடர்பு வைத்துக்கொண்டு அது சம்மந்தமாக ஏற்பட்ட கடன் கணக்குகளை சரிசெய்து கொடுப்பதற்காக ஒரு செக்கிரிட்டியாக இந்த வா.சா.ஆ.1 ஆவணத்தை பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அறிவிப்பு வழங்கிய பிறகு பிரதிவாதி என்னிடம் நேரில் வந்து பேசிய போது நான் அறிவிப்பு சம்மந்தமாக மேல் நடவடிக்கை எடுக்க மாட்டேன் என உறுதியளித்ததால் பிரதிவாதி எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டார் என்றால் சரியல்ல. அடமான கடன் பத்திரம் எனக்கு பிரதிவாதியால் எழுதிகொடுக்கப்பட்டதாக சொல்லும் தேதியில் பிரதிவாதிக்கு சொந்தமான 5 பத்திரங்களை செக்கிரிட்டியாக என் வசம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணங்கள் (எண்ணிக்கை –5) பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். திருத்துறைப்பூண்டி சார்பதிவாளர் கிரய ஆவண எண். 1060/2003, 1056/2003, 1055/2003, 937/2022, 1057/2003 ஆகிய கிரய ஆவணங்களின் சான்று நகல்களை மட்டும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேன். அசல் ஆவணங்கள் என் வசம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் தொழில் ரீதியான வரவு செலவு கணக்குகளை வைத்து அதில் எனக்கு கொடுக்கவேண்டிய கடனுக்கு செக்கரிட்டியாக வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தியும், வா.சா.ஆ.2 ல் கண்டுள்ள மேற்கண்ட 5 கிரய ஆவணங்களையும் செக்கிரிட்டியாக கொடுத்துள்ளார் ஆனால் இந்த உண்மை விபரங்களை மறைத்து நான் அடமான கடன் பத்திரத்தை நிறைவேற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளது ஏற்கககூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் தொழில் சம்மந்தமாக ஏற்பட்ட கடனுக்காக ஏற்படுத்திகொடுக்கப்பட்ட ஆவணம் என்பதால் நான் இந்த வழக்கினை நேரடியாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றும், சமரச தீர்ப்பாயத்தினை அனுகி சமரசம் பேச வேண்டும் என்றும் அந்த சமரசம் பேசும்போது அதில் தீர்வு கிடைக்காத பட்சத்தில் சிவில் வழக்கு தாக்கல் செய்ய இயலும் என்றும், நேரடியாக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் முதல் நிலை பரிகாரம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனக்கு இந்த பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கானது உரிய

வழிமுறைகளை பின்பற்றி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், வணிக கடனுக்காக நேரடியாக இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றும், எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டி வழக்கு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.